1981 மே 13]

[முற்பகல் 9. 10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும் என்ற அந்த நிலைமையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், இன்றைக்கு விடுதலை வாங்குவதற்காக நம்முடைய நாட்டிலே நடைபெற்ற போராட்டத்தின் தன்மையை உணர்ந்துகொள்ளாத நிலை மாணவர்கள் மத்தியிலே மட்டுமல்ல, எல்லோர் மத்தியிலேயும் இருக்கின்றது. அதனால்தான் பல்வேறு கஷ்டங்களை நாம் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, விடுதலைப் போராட்டத்தை நடத்தியதினுடைய தன்மையைப் பற்றியும், அதற்காகப் பலர் எடுத்துக்கொண்ட சிரமங்கள் பற்றியும் மாணவர்கள் மட்டுமல்ல, சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை உணரவேண்டும். ஆகவே அந்தக் குறையினை நிச்சயமாகக் கல்வித்துறை வைக்காது. எந்தெந்த இடங்களில் அந்த உணர்வுகளைப் புகுத்த முடியுமோ அந்தந்த இடங்களில் அந்த உணர்வுகளைப் புகுத்துவோம். போராட்டத்தின் தன்மைகளை உணர்ந்து கொள்ளாத நிலைமை இருக்கின்றது என்பதை அரசு நன்றாக உணர்ந்திருக்கின்றது.

திரு. கோ. வத்தம்பி: தலைவர் அவர்களே, பொது வாழ்க்கையில் தேசிய சுதந்திரத்திற்காகத் தூய்மையாக உழைத்த தந்தை பெரியார், அமரர் அண்ணா, அமரர் காமராஜர் போன்ற பெருந்தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் துணைப் பாட நூல்களாக உயர்நிலைப் பள்ளியில் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்களைப் பற்றியும் மாணவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்றுதான் அதற்கான வாய்ப்புகளைக் கூடுமானவரையில் செய்து வருகிறார்கள்.

ஒட்டப்பிடாரம் தாலுகா குறுக்குச் சாலையிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

*வினா எண். 1052- திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தாலுகா குறுக்குச் சாலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் உடனடியாக செப்பனிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) மற்றும் (ஆ) : இப்பள்ளியில் 4 வகுப்பறைகள் கொண்ட ஒரு ஓட்டுக்கட்டடம் மட்டும் பழுதடைந்துள்ளது. இக்கட்டிடத்தைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக் கட்டிடம் இடிந்து விழும்தறுவாயில் இருக்கின்றது என்று அரசுக்குத் தெரிவித்து 10 மாதங்கள் ஆகிவிட்டன. இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. வருகின்ற ஜூன் மாதத்திலே பள்ளிக்கூடம் ஆரம்பித்துவிடும். ஆகவே, உடனடியாக மாற்று இடவசதியைச் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று நான் பதில் சொல்லி இருக்கிறேன். நடவடிக்கை எடுத்து பள்ளி நடக்கின்ற அளவுக்குக் கல்வித்துறை பார்த்துக்கொள்ளும்.

கோவை மாவட்டத்திலுள்ள முதியோர் கல்வி நிலையங்கள்

*வினா எண் 1953- திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் முதியோர் கல்வி நிலையம் எத்தனை உள்ளது?

(ஆ) எவ்வளவு பேர் கல்வி கற்று வருகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 647 மையங்கள்

(ஆ) 18,564 பேர்

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்த முதியோர் கல்வித் திட்டத்திற்காக மத்திய அரசு கொடுத்து வந்த உதவி தற்போது நிறுத்தி விடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றதே, அது உண்மையா? அப்படியானால் அதை மீண்டும் பெற அரசு என்ன முயற்சி எடுத்து வருகின்றது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் செய்து வந்த உதவியைப் பற்றி புதிய அரசு ஏற்பட்டதற்குப் பிறகு அவர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். மறுபடியும் தருவதாக அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி அவர்கள் முடிவு எடுத்து அந்தப் பணத்தைத் தருவதற்கான வாய்ப்புக்கள் கூடிய விரைவிலே ஏற்படும்.

திரு. ஏ. டி. கருப்பையா : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே முதியோர் கல்வி நிலையங்கள் எத்தனை உள்ளன அங்கே எத்தனை முதியோர்கள் கல்வி கற்று வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 647 மையங்கள். அதிலே படிப்பவர்கள் 18,564 பேர்.